Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# இந்த ஆண்டில் 8,000 மரங்கள் நடுவதற்காக கனடா நாட்டு அரசாங்கத்திடமிருந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் $1.2மில்லியன் நிதி பெற்றது

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 4, 2021) – இன்றைய தினம், மேயர் பேட்ரிக் ப்ரவுன்; ப்ராம்ப்ட்டன் நகர கவுன்சிலர்கள்; மற்றும் ப்ராம்ப்ட்டன் கிழக்கு தொகுதிக்கான பாராளுமன்ற அங்கத்தினரும் சர்வதேச மேம்பாட்டுத்துறை அமைச்சரின் பாராளுமன்ற செயலருமாகிய மணீந்தர் சிங் ஆகியோர் இணைந்து, இயற்கை வளங்களுக்கான அமைச்சர் மேதகு சீமுஸ் ஓ'ரீகன் ஜூனியர் அவர்களின் சார்பாக இந்த ஆண்டில் ப்ராம்ப்ட்டனில் சுமாராக 8,000 மரங்களை நடவு செய்வதற்காக $1,280,000 முதலீடு செய்வதாக அறிவித்தனர்.

இது, 10 ஆண்டுகளில் இரண்டு பில்லியன் மரங்களை நடவு செய்து விடுவது என்ற கனடா அரசாங்கத்தின் திட்டத்திற்கும், 2040 க்குள் ஒரு மில்லியன் மரங்களை நடவு செய்வதற்கான ப்ராம்ப்ட்டன் நகரத்தின் தொலைநோக்குப் பார்வைக்கும் ஆதரவளிப்பதாகவும் உள்ளது.

கனடா அரசின் முதலீடானது, ப்ராம்ப்ட்டனின் நகர்ப்புறத்தில் மரங்களடர்ந்த விதானம் அமைப்பதற்கு பங்களிக்கும். நகர நிர்வாகமானது, இயற்கைமயமாக்கலுக்கான இடங்கள், தெருக்கள் தோறும், பூங்காக்களில் மரநிழலில் அமர்வதற்கான இடமாக, மற்றும் தோப்புகளில் இந்த மரங்களை வளர்க்கும். ப்ராம்ப்ட்டனின் மரம் நடுவதற்கான திட்டமானது, வரவிருக்கும் 50 ஆண்டுக் காலத்தில் 35,500 டன் பசுமை இல்ல வாயுவை (GHG) அகற்றும்.

ஒரு பசுமை நகரமாக இருந்தபடி, தனது நிலைத்து நிற்கவல்ல தன்மை, மற்றும் வெப்பதட்பம் காக்கும் முயற்சிகளின் ஒரு அங்கமாக, நகர்ப்புற காடுகளை வளர்ப்பதற்கு ப்ராம்ப்ட்டன் நகரம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. 2040 ஆண்டு வாக்கில் ஒரு மில்லியன் மரங்களை நடவு செய்வது என்பது பசுமையை வளர்ப்போம் எனும் சுற்றுச்சூழல் மாஸ்டர் திட்டம் (Grow Green Environmental Master Plan (EMP)), நகர்ப்புற வன நிர்வாகத் திட்டம் (Urban Forest Management Plan (UFMP)), மற்றும் சமுதாயத்தில் சக்தி மற்றும் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான திட்டம்Community Energy and Emissions Reduction Plan (CEERP)) ஆகியவற்றின் கீழான ப்ராம்ப்ட்டனின் திட்டமாகும்.

ப்ராம்ப்ட்டன் நகர கவுன்சிலானது செப்டம்பர் மாதத்தினை ப்ராம்ப்ட்டன் நகர மரங்களுக்கான மாதமாக நியமனம் செய்துள்ளது! இந்த வருடாந்திர கொண்டாட்டம், மரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்; மற்றும் ப்ராம்ப்ட்டனின் நகர்ப்புற

காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கிய நகரத்தின் மற்றும் சமூகத்தின் முயற்சிகளையும் கொண்டாடும்; அத்துடன், குடிமக்களின் ஈடுபாட்டை உருவாக்கும்; ஆரோக்கியமான மற்றும் காலநிலைக்கு இசைந்துகொடுக்கின்ற சமூகங்களை உருவாக்கும்; சுற்றுச்சூழலை பராமரிப்பு செய்தபடியே நகரத்தின் ஒரு மில்லியன் மரங்கள் எனும் இலக்கினையும் அடையவும் உதவும். www.brampton.ca/trees. வலைத்தளத்தில் விரைவில் விவரங்கள் கிடைக்கும்.

**லின்குகள்**

- இரண்டு பில்லியன் மரங்கள் என்பதின் அங்கமாக ப்ராம்ப்ட்டன் நகரில் மரங்களை நடுதல் (Planting Trees in Brampton as Part of Two Billion Trees)

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும் மற்றும் நமது மரங்கள், தாவரங்கள் மற்றும் பசுமையான இடங்களைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். நமது நகர்ப்புற காடு நமது சமூகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும், மேலும் 2040 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டனில் ஒரு மில்லியன் மரங்களை நடுவதற்கான நமது இலக்கை அடைய ஆதரவளிக்கின்ற இந்த நிதியை நான் வரவேற்கிறேன், மேலும் 10 ஆண்டுகளில் இரண்டு பில்லியன் மரங்களை நடும் கனடா அரசின் திட்டத்தையும் ஆதரிக்கிறேன்.

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டனின் நகர்ப்புற வனம் அமைப்பதில் கனடா அரசாங்கத்தின் முதலீடானது, நமது நிலைத்து நிற்கவல்ல தன்மை மற்றும் வெப்பதட்ப இலக்குகளுக்கு நேரடியாக பங்களிக்கும். ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாக இருப்பதை உறுதி செய்ய நிறைய வேலைகள் நடந்து வருகின்றன, மற்றும் இந்த மரங்கள் நம் சமூகத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5;
  தலைமைப்பொறுப்பு, சமூக சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டனுக்கு முதலீட்டை கொண்டு வருவதில் நகர ஊழியர்கள் அர்ப்பணிப்பு கொண்டபடி உள்ளனர். நமது நகரத்திற்கான கனடா அரசாங்கத்தின் முக்கியமான முதலீட்டை வரவேற்கிறோம். நம்முடன் செயல்படுபவர்களுடன் சேர்ந்து, பசுமையான எதிர்காலத்தை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

- டேவிட் பாரிக், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டன் உட்பட கனடா முழுவதும் மரங்களை நடுவது என்பது, 2030 ஆம் ஆண்டுக்கான வெப்பதட்ப இலக்குகளை அடையவும் மற்றும் 2050 க்குள் கார்பன் உமிழ்வை பூஜ்ஜியம் எனும் நிலைக்கு கொண்டுவரவும் உதவும். இரண்டு பில்லியன் மரங்கள் எனும் முனைப்பானது ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கு தூய்மையான காற்று மற்றும் விரிவான மரங்களடர்ந்த விதானத்தை ஏற்படுத்தி அதிக நிழலை வழங்கும்; அத்துடன் பசுமைரீதியான வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கும். இந்த முதலீட்டைப் பற்றி நான் மிகவும் பரவசமடைகிறேன், ஏனெனில் இது இந்த தலைமுறை மற்றும் வரவிருக்கும் தலைமுறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்! "

- *மணீந்தர் சித்து சர்வதேச உறவுகள் மேம்பாட்டுத்துறை அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர், மற்றும் ப்ராம்ப்ட்டன் கிழக்கு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்*

"இரண்டு பில்லியன் மரங்களை நடவு செய்வது என்னும் வெப்பதட்ப நடவடிக்கைக்கான திட்டமானது சற்று பெரிய விஷயம்தான். இது ஆயிரக்கணக்கான நல்ல, பசுமையான வேலைகளையும் உருவாக்கும் திட்டமாகும். நாடு முழுவதும் மரம் நடும் திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். மரங்களை வளர்ப்பது என்பது, கார்பன் உமிழ்வை பூஜ்யம் என்னும் நிலைக்கு நம்மைக் கொண்டு செல்லும்.

- *மாண்புமிகு சீமுஸ் ஓ'ரீகன் ஜூனியர், இயற்கை வளத்துறை அமைச்சர்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

BRAMPTON

**Media Release**

**ஊடக தொடர்புகள்**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca

இயான் கேமரன்
மூதுநிலை தகவல் தொடர்புகளுக்கான ஆலோசகர்
இயற்கைவள அமைச்சக அலுவலகம்
613-447-3488 | Ian.Cameron@canada.ca

ஊடக தொடர்புகள்
இயற்கை வளங்கள் துறை கனடா
ஒட்டாவா
343-292-6100 | NRCan.media.RNCan@canada.ca